அத்தியாயம் 2

## நாதத்தமுபதிஷ்டதி

# ராஜா சுவேதரின் கதை

யுதிஷ்டிரருக்கு 'அன்னமளி, தொடர்ந்து அன்னமளித்துக் கொண்டே யிரு' என்ற ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளை, ஸ்ரீபவிஷ்ய புராணத்தில், அன்னதான மாகாத்மியத்தைப் பற்றிய உபதேசத்தின் தொடக்கத்திலேயே காணப்படுகிறது. பின்னர் ஸ்ரீகிருஷ்ணர் வனவாசத்தின் போது ஸ்ரீராமர் உணவைத் தேடி அலைய வேண்டியிருந்ததைப் பற்றிக் கூறுகிறார். இவ்வாறு உணவைத் தேடி அலையும் போது, ஒரு சமயம் ஸ்ரீராமர் தம்பி லக்ஷ்மணரிடம் பூமி முழுவதிலும் தனதானியங்கள் கொட்டிக் கிடக்கையில், தாம் மட்டும் ஏன் உணவைத் தேடி அலைந்து வாழ வேண்டியுள்ளதெனக் கூறி ஆச்சரியம் அடைகிறார். பின் அவர் தம்பியிடம், ''ஒரு வேளை நாம் பூர்வகாலத்தில் போதுமான அளவு உணவு வழங்கவில்லை போலும்! அதனாலேயே தற்காலத்தில் உணவுக்காகத் திண்டாட வேண்டியுள்ளது'', என்கிறார். பிறகு ஸ்ரீராமர் இவ்வாறு கூறுகிறார்[1]:

> यन्न प्राप्यं तदप्राप्यं विद्यया पौरुषेण वा ।
> सत्यो लोकप्रवादोऽयं नादत्तमुपतिष्ठति ॥

நாம் ஈட்டாதது நமக்குக் கிடைக்காது; வித்யையாலும் வீரத்தாலும் கூட நம்மால் பெற முடியாது. நாம் எதைக் கொடுக்கவில்லையோ அதை அனுபவிக்க இயலாது என்கிற வார்த்தை மிகவும் சத்தியமானது.

[1] பவிஷ்ய 4.169.6, ப. 527

*ஸ்ரீராமரின் இந்த அனுபவத்தை ராஜா யுதிஷ்டிரருக்கு நினைப் பூட்டிய பின் ஸ்ரீகிருஷ்ணர் ராஜா சுவேதரின் கதையைக் கூறத் தொடங் குகிறார். விதர்ப நாட்டு மன்னர் ஸுதேவரின் புத்திரர் சுவேதர் மிகக் கீர்த்தி பெற்ற மன்னராய் விளங்கினார். சுவேத மன்னர் தம் வாழ்நாள் முழுவதும் தருமத்தின் வழி நின்று, உதார குணத்துடன் தான புண்ணி யங்களைச் செய்து வந்தார். ஆனால் அவர் ஒருபோதும் அன்னதானம் செய்யவில்லை. தம்முடைய தருமநிஷ்டையாலும், நற்குணங்களா லும் காலம் வந்த போது ராஜா சுவேதர் சுவர்க்கத்திற்கு ஆதரத்துடன் அழைத்துக் கொள்ளப்பட்டார். ஆனால் தம்முடைய உலக வாழ்க் கையில் யாருடைய பசிப்பிணியையும் தீர்க்காததால் சுவேதர் சுவர்க் கத்திலும் பசியின் கொடுமையை அனுபவிக்க நேர்ந்தது.*

*சுவர்க்கலோகத்திலும் தம்மை வருத்திய தீராப் பசியினால் சலிப் படைந்த ராஜா சுவேதர் பிரமாவை அணுகி தம்முடைய விபரீத நிலைக்கான காரணம் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையில் பிரமா இவ்வாறு கூறினார்[2] :*

अनन्नदानस्य फलं त्वयेदमुपभुज्यते ।
तर्ह्यन्नदानतो नान्यच्छरीरारोग्यकारकम् ।
नान्यदन्नादृते पुंसां किञ्चित्सञ्जीवनौषधम् ।।

*ஓ சுவேதா! நீ 'அனன்னதான'த்தின், அன்னதானம் ஒருபொழுதும் செய்யாததன் பலனை அனுபவிக்கிறாய். அன்னதானமன்றி சரீர ஆரோக்கியத்தை நிலைநிறுத்தக் கூடியது வேறொன்றும் இல்லை. மேலும், மானிடருக்கு அன்னதானத்தைத் தவிர்த்து உயிர் காக்கும் மருந்து வேறு எதுவும் இல்லை.*

*ராஜா சுவேதர் வெகுகாலம் பசிப்பிணியால் அவதியுற்றார். மீண் டும் மீண்டும் தம் பூவுடலையே உணவாகப் புசித்து அவ்வப்போது தம் பசியாற்ற முயன்றார். இறுதியில் அவர் அகஸ்திய முனிவரின் அனுக் கிரகத்தால் அன்னதானம் செய்யாததன் பாவத்திலிருந்து விமோசனம் பெற்றார். அகஸ்திய முனிவரைச் சிரத்தையுடன் உணவினால் திருப்தி செய்த பிறகு, ராஜா சுவேதர் தம் கழுத்திலிருந்து ஜ்வலிக்கும் ஒரு ஹாரத்தை அவருக்குத் தட்சிணையாகச் சமர்ப்பித்தார். தட்சிணை*

---

[2] *பவிஷ்ய 4.169.22-23, ப. 527*

யுடன் கூடிய இவ்வன்னதானத்தை நிறைவேற்றிய பின்னர், தம் பசிக் கொடுமையினின்றும் விடுபட்டு தெளிவு பெற்றார். பிற்காலத்தில் அகஸ்திய முனிவர் அந்த ஜ்வலிக்கும் ஹாரத்தையே ஸ்ரீராமர் தம் ஆசிரமத்திற்கு வருகை தந்தபோது அவருக்கு வழங்குகிறார். பின்பு ராஜா சுவேதரின் கதையை அவருக்குக் கூறுகிறார்.

## அகஸ்திய முனிவர் ஸ்ரீராமருக்குக் கதையை விவரித்தல்

சுவேத மன்னரின் சரிதம் ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தின் உத்தர காண்டத்தில் வருகிறது. ஷம்பூக வதைக்குப் பின் ஸ்ரீராமர் அயோத்திக்குத் திரும்பிச் செல்லும் போது அகஸ்திய முனிவரின் ஆசிரமத்தை அடைகிறார். ஸ்ரீராமரை அன்புடன் வரவேற்ற அகஸ்திய முனிவர் சுவேத மன்னர் தமக்களித்த அந்த ஜ்வலிக்கும் ஹாரத்தை அவருக்கு அன்பளிப்பாக வழங்குகிறார். பின்பு தமக்கு அந்தத் திவ்வியமான ஆபரணம் எவ்வாறு கிடைத்ததென்று விவரிக்கிறார்[3]:

''ஸ்ரீராமா! நான் உனக்குக் கூறப்போவது வெகு காலத்திற்கு முன்பு, இதற்கு முன்பு இருந்த ஒரு திரேதாயுகத்தில் நடந்தது. அக்காலத்தில் எல்லாப் பக்கங்களிலும் சுமார் நூறு யோசனை தூரம் பரந்து விரிந்த ஒரு பெரிய வனம் இருந்தது. ஆனால் அந்தப் பரந்த வெளியில் ஒரு மிருகமோ பறவையோ இருக்கவில்லை.

''நான் மனித சஞ்சாரமற்ற அந்த வனத்தினுள் உத்தமமான தவம் செய்வதற்குத் தகுந்த இடம் தேடி நுழைந்தேன். அந்த வனத்தின் பேரழகு விவரிக்க இயலாதது. பல விதமான மரங்கள் பலப்பல வடிவங்களுடன் காணப்பட்டன; இனிய கிழங்குகளும் கனிகளும் ஏராளமாய்க் கிடந்தன. இந்தத் திரள் வனத்தின் நடுவே சுமார் ஒவ்வொரு பக்கமும் ஒரு யோசனை தூரம் விரிந்து அகன்ற சரோவரம் இருந்தது. அபூர்வமான வனப்புடைய பட்சிகள், அன்னங்களும், காரண்டங்களும், சக்கரவாகங்களும், அந்த சரோவரத்தின் நீரை அலங்கரித்தன. அல்லிப் பூக்களும், தாமரைப் பூக்களும் அப்பொய்கையின் மேற்பரப்பை மறைத்தன. அங்கு களைச் செடிகள் தோன்றுவதற்கு இடமேயில்லை. அந்த சரோவரம் ஒரு அற்புதம்! அதிலுள்ள நீரின்

[3] வா. இராமாயணம் உத்தர 77 மற்றும் 78, ப. 1627-30

சுவை வேறெங்கும் இல்லை. பருகுவோர்க்குப் புத்துணர்வூட்டும் சக்தியும் அதில் இருந்தது.

''மாசற்ற தூய நீரையுடைய அந்த சாந்தமான சரோவரத்தின் அருகில், ஒரு புராதன ஆசிரமம் இருந்தது. அந்தப் பவித்திரமான ஆசிரமத்தில் எந்தத் தபஸ்வியும் வசிக்கவில்லை.

''ஸ்ரீராமா, புருஷோத்தமா! அந்தக் கோடைகால இரவினை அவ்வாசிரமத்தில் கழித்துவிட்டு, விடியற்காலையில் எழுந்து அந்த சரோவரத்தின் கரைக்கு ஸ்நானம் முதலிய பிராதர் விதிகளைச் செய்வதற்குச் சென்றேன். அப்போது திடீரென அந்த நீரில் ஒரு சடலம் மிதப்பதைக் கண்டு திடுக்குற்றேன். அது நல்ல ரூபத்துடனும் திடகாத்திரமாகவும் காணப்பட்டது; சுத்தமாகவும் நிர்மலமாக நன்னிலையிலும் இருந்தது. அது மட்டுமல்ல, அது நீரில் மிகவும் சோபையுடன் பிரகாசித்த வண்ணம் காட்சியளித்தது.

''நான் அந்த உடலைக் கண்டு குழம்பி ஸ்தம்பித்துப் போனேன். அதைக் கண்டு அதிசயித்தபடி, சரோவரத்தின் கரையிலே சிறிது நேரம் அமர்ந்தேன். அச்சமயத்தில் திவ்வியமான ரதம் ஒன்று கீழிறங்குவதைக் கண்டேன்; அந்த ரதம் மிக அற்புதமாய் வருணிக்க முடியாததாய் இருந்தது. அன்னப் பட்சிகளால் சுமக்கப்பட்ட அந்த ரதம் மிக விசாலமானதாக இருந்தது; மனோ வேகத்தில் சுற்றிப் பறந்தது; அதைப் போன்ற ரதத்தை இதுவரை யாரும் கண்டிருத்தல் அரிதே.

''அந்தத் திவ்விய ரதத்தில் சுவர்க்கலோகத்தைச் சேர்ந்த ஒரு திவ்விய புருஷன் வீற்றிருந்தார். திவ்விய வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அப்ஸரஸ் கன்னிகளால் சூழப் பெற்றிருந்தார். அவரை மகிழ்விக்க சில அப்ஸரஸ்கள் ரம்மியமான கானம் இசைத்தனர்; இன்னும் சிலர் மிருதங்கம், டோல், வீணை போன்ற பலவித வாத்தியங்களைக் கொண்டு சுநாதம் எழுப்பினர்; சிலர் நடனம் ஆடினர். தாமரை போன்ற விழிகளைக் கொண்ட சிலர் தங்கப் பிடிகளையுடைய சந்திரனுடைய கதிர்களைப் போல் பிரகாசிக்கும் சாமரம் கொண்டு அவருடைய முகத்திற்கு மென்மையாக வீசினர்.

''ரகுகுல நந்தனா! ஓ! ஸ்ரீராமா! பின்பு நான் கண்டது என்ன? ஒளியின் தேவனான சூரியன் மேரு மலைச் சிகரத்தினின்றும் கீழி

றங்குவது போன்று, அந்த சுவர்க்கலோக புருஷன் தம் சிம்மாசனத்தினின்றும் இறங்கி, என் கண் முன்னேயே, அந்த சரோவரத்தில் மிதந்து கொண்டிருந்த அந்த சவத்தின் நிணத்தை உண்ணத் தொடங்கினார்! வேண்டிய அளவு அந்தத் திடமான உடலின் மாமிசத்தை உட்கொண்ட பின்னர் அவர் அந்த சரோவரத்துள் நுழைந்து முகத்தையும் கைகளையும் சுத்தம் செய்யத் தொடங்கினார். முறையான ஆசாரத்துடன் தம் ஆசமனத்தை முடித்துக் கொண்ட பின்னர் அவர் தம் ரதத்தில் ஏறத் தயாரானார். அப்போது தேவ காந்தியுடன் விளங்கும் அந்தப் புருஷரை அணுகி நான் கேட்டேன்: 'ஓ! சௌம்யரே! தேவர்களைப் போல் காட்சியளிக்கும் தாங்கள் யார்? தாங்கள் இத்தகைய ஈனத்தனமான உணவை ஏன் உட்கொள்ள வேண்டும்? இவ்வளவு தேவலட்சணங்கள் பொருந்தியவர் யாரேனும் இத்தகைய உணவை உண்ணுவரோ? நான் திகைப்புற்றுள்ளேன். இந்தப் பிணம் தான் உமக்குத் தகுந்த உணவென்பதை என்னால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த விசித்திரமான சம்பவத்திற்குப் பின் உள்ள உண்மையை அறிய விரும்புகிறேன்.'

''ரகுகுல நந்தனா ஸ்ரீராமா! முறையான, மனதுக்கினிய வார்த்தைகள் பொதிந்த என் கேள்வியைப் பொருட்படுத்தி, அந்தச் சுவர்க்கலோக புருஷன் கைகள் கூப்பியபடி இவ்வாறு பதிலளித்தார்:

'ஓ! பிரமன், பெரியவரே! என் பூர்வ கருமத்தின் மீறமுடியாத பலனே என்னுடைய நற்பேறிற்கும், அவல நிலைக்கும் காரணம். அந்தப் பூர்வ கருமத்தின் கதையைக் கேட்பீராக.

'இது வெகு காலத்திற்கு முன்பு நடைபெற்றது. கீர்த்தி பெற்ற என் பிதா ஸுதேவர் அப்போது விதர்ப நாட்டு மகாராஜர். அவர் மாபெரும் வீரர். மூன்று லோகங்களிலும் அவர் புகழ் பரவியிருந்தது. அவருக்கு இரண்டு பத்தினிகள் இருந்தனர். இருவரும் முறையே ஒவ்வொரு ஆண் குழந்தையை ஈன்றனர். இருவரில் நானே மூத்தவன். எனக்கு 'சுவேதன்' எனப் பெயரிடப்பட்டது. என் இளைய சகோதரனுக்குச் சுரதன் என்ற பெயரிடப்பட்டது.

'என் பிதா ஸுதேவர் சுவர்க்கத்திற்குச் சென்ற பிறகு பிரஜைகள் என்னைச் சிம்மாசனத்தில் ஏற்றி மகுடாபிஷேகம் செய்தனர். நான் மிகுந்த கவனத்துடன் தருமத்தை அனுசரித்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தேன். உத்தமமான விரதத்தைக் கடைப்பிடிக்கும் முனி

வரே! நான் தார்மீக நெறியில் நின்று பிரஜைகளை ரட்சித்து அரசாட்சி செலுத்தி வந்தேன். இவ்வாறாக ஆயிரம் வருடங்கள் கழிந்தன.

'அப்போது அதிர்ஷ்ட வசமாக நான் விதிப்படி பூலோகத்தில் என் ஆயுளின் வரையறையைத் தற்செயலாக அறிந்து கொண்டேன். காலத்தின் கடுந்தன்மையையும் திசை மாறா ஓட்டத்தையும் உணர்ந்தவனாய் நான் ராஜ்யபாரத்தைத் துறந்து, வனத்தை நோக்கிச் சென்றேன். என் இளைய சகோதரன் சுரதனைச் சிம்மாசனத்தில் அமர்த்தி விட்டு அணுகுவதற்குச் சிரமமானதும், விலங்கினங்களும் புள்ளினங்களும் இல்லாத இந்தக் காட்டிற்குள் பிரவேசித்து இந்தப் பொய்கையின் அருகில் தவம் செய்யத் துவங்கினேன். நான் இந்தத் திவ்வியமான பொய்கையின் அருகில் மூவாயிரம் ஆண்டுக் காலம் கடுந்தவத்தில் ஆழ்ந்தேன். முடிவில் உத்தமமான பிரமலோகத்தை அடைந்தேன்.

'ஆனால், துவிஜோத்தமரே! பிரமாவின் அந்தச் சுவர்க்கலோகத்திலும் கூட, நான் தீரா தாகத்தாலும் கடும் பசியாலும் அவதியுற்றேன்; மிகத் துன்பப்பட்டேன். என் கொடும் பசியாலும் தணியா நீர் வேட்கையாலும் என் புலன்கள் அனைத்தும் வேதனைக்குள்ளாயின.

'ஒரு முறை வேதனை பொறுக்க முடியாமல் நான் மூன்று லோகத்திற்கும் முதற் கடவுளான பிரம பிதாமஹரை அணுகி அவரிடம், 'பகவானே! உம்முடைய பிரம்லோகத்திலோ எந்தப் பசி தாகத்திற்கும் இடமில்லை. பின் எனக்கு மட்டும் ஏன் இந்த நிலை? என்னுடைய எந்தக் கருமத்தின் பலனாய் நான் இப்பசி, தாகத்தை அனுபவிக்கிறேன்? இப்போது எனக்கான உணவு தான் என்ன? பிரமதேவரே! கருணை கூர்ந்து எனக்கு இதைத் தெளிவுறுத்த வேண்டும்?' என்றும் கேட்டேன்.

'என் வேண்டுகோளை ஏற்று பிரமதேவர் இவ்வாறு கூறினார்: 'ஸுதேவனின் புத்திரனே! நீ தினமும் உன் பூத உடலின் மாமிசத்தை உண்பாயாக. அதுவே உனக்கு விதிக்கப்பட்ட ஆகாரம். சுவேதா! நீ உன் பூலோக வாழ்வில் உயர்ந்த தவநெறிகளை மேற்கொண்டு வாழ்ந்தது உண்மையே; ஆனால் நீ உன் சரீரத்தை மட்டுமே பாதுகாத்துப் போஷித்து வந்துள்ளாய். மற்றவர்களுக்கு ஒரு கவளம் உணவு கூட நீ தானமளிக்கவில்லை. மாமேதையான சுவேதனே! எது விதைக்கப்படவில்லையோ, அதை அறுவடை செய்ய இயலாது[4]:

[4] வா. இராமாயணம் உத்தர 78.15, ப. 1630

अनुप्तं रोहते श्वेत न कदाचिन्महामते।

'நீ பூவுலகில் சிறந்த தவம் செய்தாய். ஆனால் ஒரு முறையேனும் ஒரு பருக்கை உணவு கூட யாருக்கும் வழங்கவில்லை. எனவே தான், இப்பிரமலோகத்திலும் நீ பசி தாகத்தால் பாதிக்கப்படுகிறாய்.

'நீ பூலோகத்தில் உன் சரீரத்தைப் பலவித ஆகாரத்தினால் நன்றாகப் போஷித்திருக்கிறாய். அந்தத் தேகம் முழுவதும் அமிர்தத்திற்கு ஒப்பான ரசங்களைக் கொண்டு விளங்குகிறது. அதுவே உனக்கு அளிக்கப்பட்டுள்ள உணவாகும். நீ அதை உண்டு வாழ்வாயாக.

'வெகுகாலத்திற்குப் பிறகு அகஸ்திய மாமுனிவர் இந்த வனத்திற்கு வருகை தரும் போது நீ இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்கப்படுவாய். சௌம்யனே! அகஸ்திய முனிவர் தேவர்களுக்குக் கூட மோட்சம் அளிக்க வல்லவர். தீராப் பசி தாகக் கொடுமையில் மிகத் துன்புறும் உனக்கு விடுதலையளிப்பது அந்த மாமுனிவருக்கு ஒரு கடினமான செயலல்ல.'

''சுவேதர் தன் கதையைத் தொடர்ந்தார்: 'துவிஜோத்தமரே! பிரமாவின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, எனக்களிக்கப்பட்ட இந்த ஈனத்தனமான உணவினை உட்கொள்ளத் தொடங்கினேன். என்னுடைய இந்தப் பூத உடலின் மாமிசத்தை பல ஆண்டுகளாக நான் உண்டு வருகிறேன். ஆனாலும் அது அளவில் குறையாமல் நிலைத்து நின்று என் பசியை ஆற்றி வருகிறது.

'நான் இவ்வாறு பெரும் துன்பத்தில் சிக்கியுள்ளேன். கருணை கொண்டு இந்தச் சங்கடத்திலிருந்து என்னை விடுவிப்பீராக. ஒருவரும் அணுகாத இந்த வனத்திற்குள் பிரவேசித்த நீர் அகஸ்திய முனிவராகத் தான் இருக்கவேண்டும். துவிஜோத்தமரே! உமக்கு மங்களம் உண்டாகட்டும். என்னைக் கரை சேர்க்க இந்த ஆபரணத்தை என் கைகளினின்றும் ஏற்று என்னைத் தாங்கள் அனுக்கிரகிப்பீராக.

'முனிவரே இந்த தேவலோக ஆபரணம் பொன், தனம், உடை, உணவு மற்றும் எல்லா ஐஸ்வரியத்தையும் தரவல்லது. இந்த ஆபரணத்தைத் தங்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் நான் என்னுடைய எல்லா அபிலாஷைகளையும் போகங்களையும் சமர்ப்பித்து விடுகிறேன். பகவானே! தங்களிடம் மன்றாடிக் கேட்கிறேன். தயை கூர்ந்து என்னை இந்தச் சங்கடத்திலிருந்து மீட்டு அருளுங்கள்.' ''

இதுவரை சுவேதரின் சோகக் கதையை அவர் வார்த்தைகளின் மூலமாகவே விவரித்த அகஸ்திய முனிவர், தான் அந்த திவ்விய ஆபரணத்தை ஏற்றுக் கொண்டதாகவும், அதற்குப் பின் அங்கே இருந்த சுவேதரின் பூத உடல் சுவடே இன்றி மறைந்ததாகவும், உடல் அழிவுற்றதும் பசிப்பிணியிலிருந்து விடுபெற்று அளவற்ற மன நிம்மதி அடைந்த சுவேத மன்னர் பரமானந்தத்துடன் மீண்டும் பிரமலோகம் சென்றதாகவும் கூறினார்.

## ஸ்ரீவராஹர் அன்னதான விரதத்தை உபதேசித்தல்

ஸ்ரீவராஹ புராணத்தில் ஸ்ரீவிஷ்ணுவின் மூன்றாவது அவதாரமான ஸ்ரீவராஹர் பூமிதேவிக்கு அன்னதான விரதத்தின் மகிமையை உபதேசிக்கையில் ராஜா சுவேதரின் கதையைக் கூறுகிறார். மனிதன் தன் குறுகிய ஆயுள்காலத்தில் தனக்கு வாய்த்த திறமைகளுக்குட்பட்டு, அதிக பிரயாசையின்றி மேற்கொள்ளக் கூடிய விரதத்தைப் பற்றி உபதேசிக்குமாறு பூமிதேவி ஸ்ரீவராஹரிடம் கோரினாள். அதற்குப் பதிலளிக்கையில், முன்னொரு காலத்தில் ராஜா சுவேதர் இதே கேள்வியைக் கேட்டபொழுது வசிஷ்டமுனிவர் கீழ்க்கண்டவாறு பதிலளித்ததாக ஸ்ரீவராஹர் தெரிவிக்கிறார்[5]:

> अन्नदानं ददद् राजन् सर्वकालसुखावहम् ।
> अन्नेन चैव दत्तेन किं न दत्तं महीतले ॥

> மகாராஜா, அன்னதானம் செய்யுங்கள். அன்னதானத்தால் எல்லா காலத்திற்கும் சுகமான வாழ்வு உறுதிப்படுத்தப்படுகிறது. அன்னதானத்தை மேற்கொண்ட பின் இந்தப் பூமியில் கொடுக்கப்பட வேண்டிய பொருள் வேறென்ன உள்ளது? அன்னம் அளிப்பவன் இந்தப் பூமியில் அளிப்பதற்கேற்ற அனைத்தையும் அளித்துள்ளான் எனக் கூறலாம்.

மேலும், ஸ்ரீவராஹர் தொடர்ந்தார்: வசிஷ்ட முனிவரின் இந்த போதனையின் மகத்துவத்தைச் சுவேத மன்னர் உணரவில்லை. தன்னைப் போன்ற ஒரு வைபவசாலியான மன்னரின் கைகளிலிருந்து

[5] வராஹ 98.61, ப. 345

தானமளிப்பதற்கு அன்னத்தைப் போன்ற துச்சமான வஸ்து தகுந்த தாகாதென்று எண்ணினார் போலும். அவர் எண்ணற்ற தானங்களைச் செய்தார். ரத்ன ஆபரணங்களையும், மிகச் சிறந்த வஸ்திரங்களையும், விலை மதிப்பற்ற யானைகளையும், சுபிட்சமான பெரு நகரங்களை யும் அளித்தார். பூமி முழுவதையும் வென்றார். அனேக அசுவமேத யாகங்கள் செய்தார். ஒவ்வொரு யாகத்தின் முடிவிலும் அளவிட முடி யாத செல்வங்களை அள்ளி அள்ளி வழங்கினார். ஆனால் ஒருபொழு தும் ஒருவருக்கும் உணவும் நீரும் வழங்கவேயில்லை.

உரிய காலம் வந்ததும் ராஜா சுவேதர் மரணமடைந்தார். பிறகு முறையாகச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடைய தார்மீக வாழ்விற்கேற்றபடி சுவர்க்கத்தில் அவருக்கு சகல மரியாதைகளுடன் உயர்ந்த இடம் அளிக்கப்பட்டது. ஆனால் சுவர்க் கத்திலும் அவர் பசி தாகத்திலிருந்து விடுபடவில்லை. சுவர்க்க லோகத்திலும் இவ்வாறு பசி தாகத்தால் துன்பப்பட்ட சுவேத மன்னர் ஒரு நாள் வசிஷ்டமுனிவரைக் கண்டார். தன்னை இந்தத் துர்ப் பாக்கியத்திலிருந்து விடுவிக்குமாறு மிகுந்த ஆவலுடன் பிரார்த்தித்துக் கொண்டார்.

சுவேதரை எவ்வாறு அத்துன்பத்திலிருந்து மீட்பதென்று வசிஷ்ட முனிவர் சிந்தித்தார். ஆனால் அவருக்கும் கூட பரிதாபத்திற்குரிய அந்த அரசருக்குத் தாம் எவ்வகையில் உதவுவதென்பது தெளிவாக வில்லை. ஸ்ரீபவிஷ்ய புராணத்தில் கூறப்பட்டுள்ள உபதேசமான 'எது கொடுக்கப்படவில்லையோ அதை அனுபவிக்கலாகாது' என்ப தையே சுவேதருக்கு வசிஷ்டர் உணர்த்தினார்[6]:

अदत्तं नोपतिष्ठेत कस्यचित् किंचिदुत्तमम् ।

பின்னர் வசிஷ்டமுனிவர் சுவேதரிடம் முன்பே தாம் உணர்த்த முயற்சி செய்த அன்னதானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மீண்டும் நினைவுபடுத்தினார்[7]:

रत्नहेमप्रदानेन भोगवान् जायते नरः ।
अन्नदानप्रदानेन सर्वकामैस्तु तर्पितः ।
तन्न दत्तं त्वया राजन् स्तोकं मत्वा नराधिप ॥

[6] வராஹ 98. 75, ப. 346
[7] வராஹ 98.76, ப. 346

தங்கமும் ரத்தினமும் கொடுப்பதன் மூலம் மனிதர்கள் மிகுந்த ஐஸ்வர்யத்தை அனுபவிக்கின்றனர். ஆனால் உணவளிப்பதன் மூலம் மட்டுமே அவர்கள் முழு திருப்தியடைகின்றனர். மகாராஜாவே! அத்தகைய அன்னத்தை நீ துச்சமாக நினைத்து அன்ன தானத்தை மேற்கொள்ளத் தவறிவிட்டாய்.

இவ்வாறு சுவேத மன்னரின் கதை மூலம் ஸ்ரீவராஹர் அன்னதான மாகாத்மியத்தை எடுத்துரைக்கிறார்.

## அன்னதானம் சதாவிரதம்

ராஜா சுவேதரின் கதை பதிமூன்றாவது நூற்றாண்டில் புலவர் ஹேமாத்ரி தொகுத்த சதுர்வர்க்க சிந்தாமணி என்ற தரும சாஸ்திர நூலிலும் காணப்படுகிறது. புலமை மிகுந்த இவர் சாளுக்கிய ராஜ்யத்தில் மந்திரியாக இருந்தவர். இவர் இதிகாசங்களிலும், புராணங்களிலும் மற்ற ஸ்ம்ருதிகளிலும் விதிக்கப்பட்டுள்ள தரும நெறிகளைத் தம் நூலில் தொகுத்துள்ளார்.

சதுர்வர்க்க சிந்தாமணியின் ஒரு முக்கியப் பகுதி விரத கண்டம். இப்பகுதியில் 32 அத்தியாயங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரு கிருகஸ்தன் சிரத்தையுடன் அனுசரிக்க வேண்டிய விரதங்களையும், அவற்றின் மாகாத்மியத்தையும் கூறுகின்றன. அதனுடன் இவ்விரதங்களை நிறைவேற்றுவதற்கான திதி முகூர்த்தங்களும் செய்முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. 'நானாதிதி விரதானி' என்ற தலைப்பு கொண்ட 21-வது அத்தியாயம் வீட்டுவாயிலுக்கு வரும் அதிதிக்கு செய்யப்பட வேண்டிய ஆதரவு, உபசாரங்கள் தொடர்பான விரதங்களைப் பற்றிக் கூறுகிறது. இதிலுள்ள ஒரு நீண்ட பகுதி அன்னதான மாகாத்மியத்தைப் பற்றியது. இப்பகுதியில் ஹேமாத்ரி ஸ்ரீபவிஷ்ய புராணத்தின் உத்தர காண்டத்திலிருந்து ராஜா சுவேதரின் கதையைத் தொகுத்தெடுத்து இறுதியில் இவ்வாறு கூறுகிறார்[8]:

इति श्रीभविष्योत्तरे सदाव्रतं नामान्नदानमाहात्म्यम् ।

''இங்ஙனம் ஸ்ரீ பவிஷ்யோத்தர புராணத்திலிருந்து எடுக்கப்பட்ட சதா

[8] சதுர்வர்க்க சிந்தாமணி விரதகண்டம் 21, ப. 475

விரதம் என்று புகழ் பெற்ற அன்னதான மாகாத்மியம் முடிவ டைந்தது.''

இவ்விதம் அன்னதானத்திற்கு சதாவிரதம் என்ற பெயரை ஹேமாத்ரி உறுதிப்படுத்துகிறார். சதாவிரதம் என்பதன் நேரடி பொரு ளாவது எப்பொழுதும், எல்லாக் காலங்களிலும் மேற்கொள்ள வேண் டிய விரதம் என்பதே. சதுர்வர்க்க சிந்தாமணியில் விவரிக்கப்படும் பெரும்பாலான மற்றனைத்து விரதங்களும் நைமித்திக விரதங்களா கும். அதாவது, அவையெல்லாம் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட திதி முகூர்த்தத்தில், நியமிக்கப்பட்ட பருவங்களில், குறிப்பட்ட நட்சத் திரங்களும், கிரகங்களும் சேரும் தறுவாயில் மேற்கொள்ளப்படு பவை. ஆனால், அன்னதான விரதமாவது சதாவிரதம். அதை மேற் கொள்ள குறிப்பிட்ட திதி, முகூர்த்தம் எதுவுமில்லை. அது எப்பொ ழுதும், எல்லாக் காலங்களிலும், எல்லோராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய விரதம்.

பாரத நாடெங்கும் மக்கள் இன்றும் அன்னதானத்தைச் சதாவிரத மென்றே போற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்னத்தைப் பகிர்ந்தளிப்பதே வாழ்வின் நியதி

அன்னதானமே எல்லோராலும் எக்காலமும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சதாவிரதமாகும். இந்த விரதத்தின் மாகாத்மியம் சுவேத மன்னரின் கதை மூலம் நன்கு புலப்படுகிறது. வைபவசாலி யும்,வீரியவானும், தார்மிகனுமான ராஜா சுவேதர் தருமத்தின் பாதையிலேயே ராஜ்ய பரிபாலனம் செய்தும், அனேக மகாயக்ஞங் களை நடத்தியும், பெருஞ்செல்வத்தைத் தானமளித்தும் வாழ்ந்தவர். பிறகு உரிய காலத்தில் தம் ஆயுளின் எல்லையை உணர்ந்து நாடு நகரங் களையும், அனைத்து வைபவங்களையும், செல்வங்களையும் துறந்து தவம் செய்யக் காடு சேர்ந்தவர். ஆனால் இவ்வளவு செய்தும், யாருக்கும் உணவும் நீரும் கொடுக்கத் தவறியதால், சுவர்க்கலோகத் திலும் தம்மைத் தொடர்ந்த பசி தாகக் கொடுமையைத் தீர்க்கக் கேவ லம் தம் பூத உடலின் மாமிசத்தையே உண்ணும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார். ராஜா சுவேதருடைய கதை அன்னதானத்தைப் பற் றிய பாரத நாட்டின் அடிப்படை உணர்வு மற்றும் சிந்தனையின் அடையாளமாகும்.

## ராஜா சுவேதரின் கதை

ராஜா சுவேதரின் கதை பாரத நாட்டின் பண்டைய இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் காணப்படுகிறது. வெவ்வேறு நூல்களில் கூறப்படும் இக்கதையின் சந்தர்ப்பச் சூழ்நிலைகளிலும் விவரங்களிலும் சில மாறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. எனினும், எல்லா நூல்களிலும் வெளிப்படும் ஆணித்தரமான கருத்து 'எதை அளிக்கவில்லையோ அதை அனுபவிக்கலாகாது; எனவே, எவன் ஒருவன் தன் வாழ்நாளில் மற்றவரின் பசி தாகத்தைத் தீர்க்கவில்லையோ அவன், அதன் பின் உத்தம லோகங்களிலும் கூட பசி தாகத்தால் துன்பத்திற்குள்ளாவான்' என்பதே. இதையே கானகத்தில் லக்ஷ்மணனுக்கு ஸ்ரீராமர் தெளிவுபடுத்தினார். ஸ்ரீபவிஷ்ய புராணத்தில் சுவேத மன்னருக்குப் பிரமா அருளியதும் இந்த உபதேசத்தையே. ஸ்ரீவராஹ புராணத்தில் சுவேத மன்னருக்கு வசிஷ்ட முனிவர் எடுத்துரைப்பதும் இந்த நியதியைத்தான்.

மேலும், ஸ்ரீவராஹ புராணத்தில் வசிஷ்ட முனிவர் 'எத்தனை விதமான செல்வங்களைத் தானமாக அளித்தாலும் அது அன்னதானத்திற்கு ஈடாகாது' என்பதைச் சுவேதருக்குத் தெளிவுபடுத்துகிறார். சுவேத மன்னரின் நெறிபிறழா வாழ்க்கையாலும் கூட அவருடைய 'அனன்னதான'த்தின், அன்னதானம் செய்யாததின் தோஷத்தை நிவர்த்தி செய்ய முடியவில்லை. ஏனெனில் பாரதீய சிந்தனையின்படி அன்னதானம் என்பது வெறும் புண்ணியம் சம்பாதிப்பதற்கான ஒரு சாதனம் அல்ல. தவிரவும் வேறு எந்த வகையில் ஈட்டிய புண்ணியம் எதனையும் அன்னதானத்துடன் பரிமாற்றம் செய்யவியலாது. உணவு உண்ண உட்காரும் முன்னர் உணவளிப்பதென்பது வாழ்க்கையின் நியதி; மீறமுடியாத முக்கியக் கோட்பாடு. அன்னதானம் செய்வதால் ஓரளவிற்குப் புண்ணியத்தை அடைவது உண்மையே. ஆனால் இங்கு முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டியது புண்ணியம் ஈட்டுதல் என்பதல்ல; ஒரு கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிவதால் உண்டாகும் கோர பாவத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளுதல் என்பதே ஆகும்.

தம் பூத உடலின் நிணத்தையே உண்ணும் நிர்ப்பந்தத்திற்குள்ளான சுவேத மன்னரின் கதை போதிய அளவு புண்ணியம் ஈட்டாத ஒருவரைப் பற்றியதல்ல. சனாதன தருமத்தின் ஓர் மாபெரும் ஆணையை மீறியவருக்கு உண்டாகும் கோரமான கதியை உணர்த்தும் கதை அது.

படைப்பின் வெவ்வேறு பிரிவுகளிலிருந்து பெறப்படும் பங்குகளைக் கொண்டு தான் இவ்வுலக வாழ்க்கை நிர்வகிக்கப்படுகிறது என்பதே பாரதத்தின் அடிப்படை சித்தாந்தம். எனவே, மனிதன் தன் பிறப்பு மற்றும் வாழ்வை நடத்திச் செல்வதன் மூலம் மனித சமுதாயத்திற்கு மட்டுமன்றி, சிருஷ்டி முழுமைக்குமே கடன் பட்டவன், ரிணி, ஆகிவிடுகிறான். தான் உண்பதற்கு முன்னால் சிருஷ்டியின் மற்றெல்லா பிரிவுகளுக்கும் உரிய பங்கை வழங்குவதும் மற்றும் பிறரின் பசி தாகத்தைத் தீர்க்க முயல்வதும், இந்தக் கடனை, ரிணத்தை, அங்கீகரித்து ஓரளவிற்கு திரும்பச் செலுத்துவதான கடமையேயாம். இந்தக் கடனை அங்கீகரிக்காமலும், அதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளாமலும் இருக்கும் மனிதன், சிருஷ்டிக்கு ஆதாரமாய் விளங்கும் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் நிரந்தர பிணைப்பிலிருந்து இடறி விழுகிறான். இதனால் அவன் மனித சமூகத்திலிருந்து மட்டுமல்லாமல், இந்தப் பிரபஞ்சத்திலிருந்தே ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு சண்டாளனாக மாறுகிறான். இந்த அனைத்து சிருஷ்டியிலிருந்தும் அவன் உணவாகப் பெறக் கூடியது எதுவுமில்லை. சிருஷ்டியின் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் பிணைப்பிலிருந்து நீக்கிக் கொண்டு தன்னை மட்டுமே பராமரிப்பதில் ஈடுபட்ட அவனுக்கு உணவாக எஞ்சுவது தன் தேகம் மட்டுமே. இவ்வாறு தன்னுடைய சரீரத்தையே உணவாகக் கொண்ட ராஜா சுவேதரும் கூட இந்தப் பிரபஞ்சத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு சண்டாளரைப் போன்றே தென்படுகிறார்.

பாரத நாட்டின் பண்டைய இலக்கியங்களில் ஆங்காங்கே சித்திரிக்கப்படும் தம் மாமிசத்தையே உண்ணும் ராஜா சுவேதரைப் பற்றிய கோரமான வருணனை அதிர்ச்சியும் அருவருப்பும் உண்டாகும்படியே உள்ளது. சனாதன தரும நெறியைப் பின்பற்றி வாழும் பாரத சமூகம், இந்நெறியினின்றும் விலகிப் பகிர்ந்துண்ணாத இழித்தனத்தில் ஈடுபட்டவனிடம் கொள்ளும் கடுமையான அருவருப்பையே இது சுட்டிக்காட்டுகிறது. பின் வரும் அத்தியாயங்களில் புராதன பாரதீய இலக்கியத்தின்படி யாசகருக்குக் கதவை அடைத்து விட்டு உள்ளிருந்து களிப்புடன் புசிப்பதாலும், தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், புழு, பூச்சிகளுக்கும், புள்ளினங்களுக்கும் ஆகாரமளிக்காமல் தான் மட்டும் வயிறார உண்பதாலும், சிறு குழந்தைகள் பசியுடன் பார்த்துக் கொண்டிருக்கை

யில் தான் மட்டும் உணவை ரசித்துப் புசிப்பதாலும் உண்டாகக் கூடிய கொடும் பாவத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் காண்போம். தருமத்தைக் கடைப்பிடித்தொழுகிய மஹாராஜா சுவேதர் தன்னந்தனியாக திவ்வியமான ஏரிக்கரையில், ருசிகரமான கனிகளும் வேர்களும் நிறைந்திருக்கும் வனத்தினுள், தம் சடலத்தின் மாமிசத்தைப் புசித்துக் கொண்டிருந்த காட்சி, ஈயாமல் உண்டதன் பயங்கர விளைவையே சித்திரிக்கின்றது.

சுவேதருக்கு விதிக்கப்பட்ட கோரமான கதி அவருடைய கருமத்தின் பலனே. உணவைப் பற்றின பாரதீய சனாதன கோட்பாட்டை மீறியதனால் உண்டான தவிர்க்க முடியாத பலனையே அவர் அனுபவிக்கிறார். அன்னம் தொடர்பான பாரதத்தின் அடிப்படை நியமனங்கள் பாரதத்தின் ஆதி நூல்களிலிருந்து தொடங்கி அனைத்து இலக்கியங்களிலும் ஆணித்தரமாய் நிறுவப்பட்டுள்ளன.

தைத்திரீயோபநிஷத்து எதிரொலிக்கும் உபதேச வரிகள் கீழ் வருமாறு[9]:

न कंचन वसतौ प्रत्याचक्षीत । तद्व्रतम् । तस्माद्यया कया च विधया
बह्वन्नं प्राप्नुयात् । आराध्यस्मा अन्नमित्याचक्षते ॥

உன் வீட்டு வாயிலை அணுகும் யாரையும் முறையாக உபசரித்து உணவளிக்காமல் திரும்ப அனுப்பாதே. இதுவே மனிதப் பிறவியின் மீறமுடியாத விரதம்.

எனவே, எவ்வாறேனும் மிகுதியான அளவில் உணவைப் பெறுவாயாக. அதன் பொருட்டு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்வாயாக. அபரிமிதமான இந்த உணவு அனைவரும் பகிர்ந்து கொள்வதற்குத் தயாராக உள்ளதை எல்லோருக்கும் பறைசாற்றுவாயாக.

இவ்வாறு உணவைப் பெருக்கும் விரதத்தைத் தைத்திரீயோபநிஷத்து உபதேசிக்கிறது. மேலும் அன்னத்தை ஒருவர் எந்த அளவு வழங்குகிறாரோ அந்த அளவே அவருக்குக் கிடைக்கப்பெறும் என்னும் மாற்ற முடியாத நியதியையும் வலியுறுத்துகிறது[10]:

---

[9] தைத்திரீயோபநிஷத்து 3.10, ப. 230
[10] தைத்திரீயோபநிஷத்து 3.10, ப. 230

एतद्वै मुखतोऽन्नꣳ राद्धम् । मुखतोऽस्मा अन्नꣳ राध्यते । एतद्वै
मध्यतोऽन्नꣳ राद्धम् । मध्यतोऽस्मा अन्नꣳ राध्यते । एतद्वा
अन्ततोऽन्नꣳ राद्धम् । अन्ततोऽस्मा अन्नꣳ राध्यते ।।

*யார் உணவைப் பெருமளவில் மிகுந்த மரியாதையுடனும் சிரத்தையுடனும் அளிக்கிறாரோ, அவர் அதே பெருமளவில் உயர்ந்த மரியாதையுடன் உணவைப் பெறுவார்.*

*யார் உணவை சுமாரான அளவில், சுமாரான மரியாதையுடன் அளிக்கிறாரோ, அவர் சுமாரான அளவில் சுமாரான மரியாதையுடன் உணவைப் பெறுவார்.*

*யார் உணவை மிகக் குறைந்த அளவில் அவமதிப்புடனும் சிரத்தையின்றியும் உணவளிக்கிறாரோ, அவர் அதே போன்ற மிகக் குறைந்த அளவில் இகழ்ச்சியான முறையில் உணவைப் பெறுவார்.*